# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM

## TERM -1 WORK SHEET (2017-18)

## CLASS – VI – TAMIL

## தமிழ்

## பகுதி – 1

**அ.கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

தமிழ்ப் பெண்களின் தவ விளக்காக ஒளிர்ந்தவர் டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார்.கல்வி பயிலும் காலத்திலேயே மகாகவி.பாரதியார் ,சரோஜினி நாயுடு, அன்னிபெசன்ட் ஆகியோரின் நட்பு இவருக்குக் கிட்டியது. இவரது உள்ளத்தில் விடுதலைச் சிந்தனை மட்டுமில்லாமல் பெண் முன்னேற்றச் சிந்தனையும் தோன்றியது. வாழ்வில் திக்கற்றவர்களாய் நின்ற பெண்களுக்கும் , ஆதரவற்றவர்களாய் நின்ற குழந்தைகளுக்கும் அவரது இல்லத்திலேயே 'ஔவை இல்லம்' தொடங்கினார். இவர் முதல் இந்தியப் பெண் மருத்துவராகவும் , சட்டப்பேரவைத் துணைத் தலைவராகவும் திகழ்ந்தார்.

வினாக்கள் :-

1.டாக்டர் முத்துலெட்சுமிக்கு யாவருடைய நட்பெல்லாம் விடைத்தது ?

2.இவரது உள்ளத்தில் தோன்றிய சிந்தனைகள் எவை ?

3.' ஔவை இல்லம்' எதற்காகத் தொடங்கப்பட்டது ?

4.முத்துலெட்சுமி வகித்த பதவி எது ?

5.மேலே உள்ள பத்தியில் யாரைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது ?

**ஆ.உனக்குப் பிடித்த பறவை ஒன்றனைப் பற்றி கட்டுரையாக எழுதுக.**

**இ. விடுப்புக் கடிதம் எழுதுக.**

**உடல் நலமின்மை காரணமாக பள்ளி வர முடியாமைக்கு விடுப்பு வேண்டி வகுப்பு ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

## பகுதி – 2 இலக்கணம்

அ.சான்று தருக :-

1.உயிர் எழுத்து இடம் பெறும் சொல்

2.இடைச்சொல்

3.உரிச்சொல்

4.ஆய்த எழுத்து இடம்பெறும் சொல்

5.வினைச்சொல்

6.மெய்யெழுத்து இடம் பெறும் சொல்

7.மூவெழுத்துச்சொல்

ஆ.நிரப்புக :-

1.உயிர் எழுத்துகள் __________ , _________ என இரு வகைப்படும்.

2.உரிச்சொற்கள் ______________________ உரியவை.

3.தனிநிலை என்பது ____________________.

4.ஒருவன் செய்த வினையைக் குறிப்பது ______________

5.சால , நனி என்பதன் பொருள் __________

6.எய்தான் என்பது _____________ சொல்

இ.அடைப்புக்குள் கூறியவாறு செய்க :-

1.வேங்கை நாடு (கை என்பது எவ்வகை எழுத்து?)

2.ஆகாயம் (உயிர்நெடில் எழுத்தை எடுத்து எழுதுக)

3.சாலச் சிறந்தது (சால – எவ்வகைச் சொல்? )

4.மீன் (உரிச்சொல் சேர்த்து எழுதுக)

5.பாண்டவர்கள் (மாத்திரை எழுதுக)

6.மெய்யெழுத்துகள் (எண்ணிக்கையை எழுதுக)

**ஈ. தகுந்த இலக்கணக்குறிப்பு தருக :-**

1. நனி மகிழ்ந்தாள் -

2. க் ச் ட் த் ப் ற் -

3. அ, இ, உ, எ, ஒ -

4. மணிமேகலை -

5. பறந்தன -

6. மலையை அடைந்தேன் -

**உ. சரியானதை தேர்ந்தெடுக்க :-**

1. அ. மாதவன் - பெயர்ச்சொல்

ஆ. மாதவன் - வினைச்சொல்

இ. மாதவன் - உரிச்சொல்

2. அ. ஒட்டகம் – உயிர் எழுத்து சொல்லின் முதலில் இடம் பெற்றுள்ள சொல்

ஆ. ஒட்டகம் – உயிர் எழுத்து சொல்லின் இடையில் இடம் பெற்றுள்ள சொல்

இ. ஒட்டகம் – உயிர் எழுத்து சொல்லின் இறுதியில் இடம் பெற்றுள்ள சொல்

3. அ. கிளி – உயிர்மெய் நெட்டெழுத்துகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

ஆ. கிளி – உயிர்மெய் குற்றெழுத்துகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

இ. கிளி – மெய்யெழுத்துகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

4. அ. பொற்கொடி – மூன்று மாத்திரை

ஆ. பொற்கொடி – மூன்றரை மாத்திரை

இ. பொற்கொடி – நான்கு மாத்திரை

## பகுதி 3 – மொழிப்பயிற்சி

**அ. பொருள் கூறுக :-**

ஆணை - அறிஞர் - ஏனம்-

இடும்பை - காவாக்கால் - தன்னெஞ்சு -

பயனிலா - சினம் - சுடும்

**ஆ. பிரித்து எழுதுக :-**

அரசாணை - முரசறைந்து - துண்டுக்கயிறு –

நன்றன்று - வித்தாகும் - சினங்காக்க -

**இ. சேர்த்து எழுதுக :-**

பொன் + காசு – கல் + கண்டு – பொறுத்து + அருள்க –

தன் + நெஞ்சு – தீ + ஒழுக்கம் - பயன் + உடைய –

**ஈ. நிரப்புக :-**

1. வேங்கை நாட்டுக்கு விருந்தினராக வந்தவர் ________________

2. அறிஞர் கூறிய செயலைச் செய்து வந்தவன் ____________

3. சாம்பலைக் ____________ திரிக்க வேண்டும்.

4. எறும்பு சங்கின் எதிர்ப்புறம் வர ____________ துண்டு வைக்கப்பட்டது.

5. திருக்குறளை இயற்றியவர் ______________

6. தன்னெஞ்சறிவது ______________

7. திருக்குறளில் ______________ குறட்பாக்கள் உள்ளன.

**உ. முதல் எழுத்தை மாற்றி வேறு வேறு சொல்லாக்குக.**

1.நாடி - ____________ , ______________ , _______________ , ____________

2.சொல் - ____________ , ______________ , _______________ , ____________

## பகுதி 4

**அ. கீழ்க்காணும் உரைநடைப் பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி :-**

அரசரின் ஆணை முரசறைந்து அறிவிக்கப்பட்டது. நாடெங்கும் ஒரே பரபரப்பு. மக்கள் அனைவரும் மிகுந்த வருத்தத்துடன் முதியவர்களை அண்டை நாடுகளுக்கு அனுப்பினர். ஆனால் , மதிவாணன் என்னும் இளைஞன, வயதான தன் தந்தையின் மீது கொண்ட அன்பால், அவ்வாறு செய்யவில்லை. தன் வீட்டிலேயே மறைவான இடத்தில் வைத்துப் பாதுகாத்து வந்தான்.

**வினாக்கள்**

1.மக்கள் முதியவர்களை அண்டை நாடுகளுக்கு அனுப்பக் காரணம் __________

அ.மக்களது விருப்பம் ஆ.முதியவர்களது விருப்பம் இ.அரசரின் ஆணை

2.மதிவாணன் என்பவன் ஓர் ____________

அ.அரசன் ஆ.இளைஞன் இ.அமைச்சன்

3.மதிவாணன் தன் தந்தையை மறைத்து வைத்த இடம் ____________

அ.தன் வீடு ஆ.காடு இ.அரண்மனை

4.முதியவர் - எதிர்ச்சொல் ______________

அ.வயதானவர் ஆ.இளையவர் இ.பெரியவர்

**ஆ. அடிமாறாமல் எழுதுக :-**

1.' நன்றி' , 'சொல்லுக' எனத் தொடங்கும் குறள்

2.' தரும்' , 'சுடும்' என முடியும் குறள்

**இ. குறுகிய விடையளி :-**

1. சினத்தை ஏன் அடக்க வேண்டும் ?

2. தன்னெஞ்சே தன்னைச்சுடும் - ஏன் ?

3. எப்போதும் துன்பம் தருவது எது ?

4. மதிவாணன் தன் தந்தையை எங்கே மறைத்து வைத்தான் ?

5. மதிவாணன் 'என்னைப் பொறுத்தருள வேண்டும்' என ஏன் கூறினான் ?

6. வேங்கை நாட்டு அரசன் யார் ? அவர் பெயர் என்ன ?

**ஈ. விரிவான விடையளி :-**

1. சாம்பலில் கயிறு எவ்வாறு செய்யப்பட்டது ?

2. வெளிநாட்டிலிருந்து வந்த அறிஞர் கூறிய செயல்கள் யாவை ?

3. திருக்குறள் குறிப்பு வரைக.

**உ. முறைமாறி அமைந்த சொற்றொடர்களை ஒழுங்குபடுத்தி பத்தியாக்குக:-**

1. கவிஞர் கண்ணதாசன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப்பாடல்களை இயற்றியுள்ளார்.

2. சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927ஆம் ஆண்டு கண்ணதாசன் பிறந்தார்.

3. தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கினார்.

4. இவரின் இயற்பெயர் முத்தையா.

5. இவர் 1981ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

6. இவருக்குக் காரைமுத்துப் புலவர் , வணங்காமுடி , பார்வதிநாதன் , ஆரோக்கியநாதன், கமகப்பிரியா எனப் புனைப் பெயர்கள் உண்டு.

****************